செ.வெ.எண்.84 நாள்.30.10.2017.

திருநெல்வேலி பாளையங்கோட்டை மனகாவலம்பிள்ளை நகர் அம்பேத்கர் நகர் பகுதியில் மொக தூய்மை பணிகள் மற்று டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வீடு,வீடாக நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---------

திருநெல்வேலி பாளையங்கோட்டை மனகாவலம்பிள்ளை நகர் அம்பேத்கர் நகர் பகுதியில் மொக தூய்மை பணிகள் மற்று டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (30.10.2017) வீடு, வீடாக நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். பாளையங்கோட்டை மனகாவலம்பிள்ளை நகர் அம்பேத்கர் நகர் பகுதியில் டெங்கு கொசு புழு ஒழிப்பு பணி, அபேட் மருந்து ஊற்றும் பணி மற்றும் மெகா தூய்மை பணி ஆகிய பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இப்பகுதியில், பொதுமக்களுக்கு டெங்கு கொசு ஒழிப்பு விழிப்புணர்வு குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் எடுத்துரைத்தார். டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் தூய்மை பணிகளில் பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். பொதுமக்கள் தங்களது இடங்களை சுகாதாரமாகவும் டெங்கு கொசுகள் உற்பத்தி ஆகாத வகையில் வைத்திருக்க வேண்டும். மேலும் 31.10.2017 முதல் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளிகள், தனியார் கல்லூரிகள், தனியார் தொழிற்சாலைகள், தனியார் நிறுவனங்கள், திருமணமண்டபங்கள், வணிகவளாகங்கள், தனியார் மருத்துவமனைகள், விடுதிகள், புதியதாக கட்டப்படும் கட்டிடடங்கள் உள்ளிட்டவை டெங்கு கொசு புழுக்கள் உற்பத்தி ஆவாதை மாவட்ட நிர்வாகத்தினால் கண்டறியப்பட்டால் அக் கட்டிடங்கள் மீது கடுமையான அபராதமும் கட்டிட உரிமையினை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஆய்வின்போது, மாநகர நகர் நல அலுவலர் மரு.பொற்செல்வன், பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.தங்கராஜ், வட்டார மருத்துவ அலுவலர் மரு.சுகன்யா தேவி, சுகாதார ஆய்வாளர் திரு.இளங்கோ உள்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.